# நரகத்திற்கு செல்ல வேண்டாம்!

www.DivineRevelations.info/TAMIL

2009 இல், கொரிய இளம் பெண் ஓவியர் ஒருவர் ஒரு முழு இரவு பிரார்த்தனை கூட்டத்தில் பங்கு பற்றினார். அந்த கூட்டத்திலே இயேசு கிறிஸ்து அவருக்கு பிரசன்னமாகி நரகத்திற்கும் சொர்கத்திற்கும் அவரை அழைத்து போய் அங்கே அவருக்கு காட்டப்படும் எல்லா காட்சிகளை உலகம் அறியும் படிக்கு அவைகளை படமாக வரையும் படி கூறினார்

கொரிய பெண் ஓவியர் : நான் முழு இரவும் ஜெபித்து கொண்டிருந்தேன், எனக்கு கர்த்தரை அதிகதிகமாக நேசிக்க முடிந்தது. ஒருநாள் கர்த்தர் என்னிடம் வந்து நான் உனக்கு சொர்கத்தின் ஆழ்ந்த காரியங்களை காட்டப்போகிறேன் என்று கூறினார்.

நான் நினைத்தேன் சொர்கத்திற்கு நான் பயனிக்க போவதாக ஆனால் நாங்கள் நரகத்திற்கு சென்றோம்.



இயேசு கிறிஸ்துவை நான் தொடர்ந்து அழுது கொண்டே போனேன். அப்பொழுது நான் அழுகையின் சத்தங்களையும் முனங்கள் சத்தங்களையும் கதறும் சத்தங்களையும் கேட்டேன். அனேக ஜனங்கள் நரகத்தை பற்றி தவறான கருத்தை கொண்டுள்ளனர். அவர்கள் வஞ்சிக்க பட்டு இயேசு கிறிஸ்துவை நம்பினால் மட்டும் பொது சொர்கத்திற்கு போய்விடலாம் என நினைகின்றனர். இன்னும் சிலர் மரணத்தின் பின் எல்லாம் முடிந்து விடும் அதன் பின் ஒன்றும் இல்லை என்று நினைக்கின்றனர். மனிதர்கள் அவர்கள் நினைப்பதை நம்புகின்றனர் அதனால் அவர்கள் விரும்பிய வண்ணம் அவர்கள் ஜீவிக்கின்றனர்.




மனிதர்கள் வன்முறையான திரைப்படங்களையும் நாடகங்களையும் பார்க்கும்போது, பிசாசுகள் அவர்களுடைய ஆத்துமாக்களை அவர்கள் நினைக்காத வண்ணம் கொடுமை படுத்துகின்றன என்று இயேசு கிறிஸ்து எனக்கு காண்பித்தார். ஒரு நபர் டிவியில் ஒரு காட்சியை ரசிக்கும் போது அவருடைய ஆத்துமா கொடுமைப்படுத்தபடவும் காயப்படவும் செய்கின்றது. கிறிஸ்தவர்கள் டிவியில் உலக பிரகாரமான காரியங்களை பார்ப்பது மணவாளன் இயேசுவிடம் அன்பை விருத்தியடைய செய்ய உதவாது.



மனிதர்கள் புகைபிடிக்கும் போதும் மதுபானம் அருந்தும் போதும், பாம்பின் ஆவிகள் அந்த புகையிலும் மதுபானத்திலும் நிறைந்து காணப்படுகின்றன.



மனிதர்கள் எப்படி நரகத்துக்குள் விழுகிறார்கள் என்பதை கர்த்தர் எனக்கு காண்பித்தார்.



ஒவ்வொருநாளும் எண்ணிக்கையற்ற ஜனங்கள் நித்திய நரக அக்கினியிலே விழுவதை நான் காண்கிறேன். தயவு செய்து மனிதர்களிடம் நரகத்தில் உனக்கு சாட்சியாக காட்டியவைகளை சொல்! நீ அவர்களுக்கு நரகத்தைப்பற்றி சொல்வது அவசியம்! நரகமானது எவ்வளவு கொடூரமானது என்றும் எவ்வளவு பயங்கரமானது என்றும் நீ அவர்களுக்கு சொல்ல வேண்டும். நீ என் இருதயத்தில் இருப்பதை போல் இந்த நரகத்தின் காட்சிகளையும் ஓவியமாக வரைய வேண்டும். என் இருதய வேதனையோடு கூட நீ இவைகளை வரைய வேண்டும்.
அவர்கள் நரக அக்கினியிலே விழுகின்றனர். என் இருதய வேதனையை நீ வரைய வேண்டும்.




ஆண்டவர் ஒவ்வொரு நாளும் நரகத்துக்குள் விழும் மனிதர்களை பார்த்து மிகவும் வேதனைப்பட்டார்

கர்த்தரின் சாட்சியின் படி ஒரு மனிதன் பாவம் செய்யும் போது அவர் கண்ணீர் வடிக்கிறார். சாத்தானும் அவனது பிசாசுகளும் பாவம் செய்த மனிதனை கட்டுபாட்டிற்குள் வைத்திருக்கும் படிக்கு அவனது உடல்களை இரும்பு சங்கிலிகளால் இறுக்கமாக கட்டுகின்றன. அதனால் பாவிகள் அதிகதிகமான பாவத்துக்குள் போகின்றனர்.
நான் உங்களிடம் கேட்பது என்னவென்றால் பாவம் செய்ய வேண்டாம். உங்களின் விருப்பபடியும் வாழ வேண்டாம் . நரகத்திலே உணர்வுகள் பூமியில் இருக்கப்பதை பார்க்கிலும் நூறு மடங்கு அதிகமாக இருக்கின்றன. வேதனைகளும் மிகவும் அதிகம்.

நரகத்தின் காட்சிகளை ஓவியமாக நான் வரைந்த போது சாத்தான் என்னை அதிகமாக தாக்கினான். ஆனாலும் எனக்கு தேவைப்பட்ட தெல்லாம் நரகத்தை கொடூரத்தை பற்றியும் ஆண்டவராகிய இயேசுவின் கருணையை பற்றியும் உலகத்திற்கு வெளிப்படுத்த வேண்டும் என்பதே.



சிலுவையில் மக்கள் கொடுமைப்படுத்தபடுவதை நான் பார்த்தேன்.



நான் அங்கே ஜீவ அப்பத்தை புசிக்க விரும்பாதவர்களை பார்த்தேன் ( கடவுளின் வார்த்தையை)




வாழ்க்கையில் இயேசு கிறிஸ்துவிடம் ஆலோசனை கேட்காமல் தங்களுக்கென்று தீர்மானங்களை எடுத்து கொண்டு தங்களுடைய சொந்த விருப்பத்தின்படி நடந்தவர்களை கண்டேன்.



தடை செய்யப்பட்ட பொருட்களை குடித்து உட்கொண்ட மக்கள் அங்கு இருந்தனர்.




இயேசு: மற்றவர்களின் மனதை வேதனைபடுத்தும் வார்த்தைகளை பேசும் மனிதர்களிடம் தயவு செய்து சொல் அவர்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கும் தங்களுடைய சகோதரர்களை வேதனைபடுத்தும் வார்த்தைகளையோ அல்லது புண்படுத்தும் வார்த்தைகளையோ பேச கூடாது. அவர்கள் அன்பும் கருணை கொண்ட வார்த்தைகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.



இப்படியே கொலைகாரர்களும், கற்பழிப்பவர்களும், சிறுவர்களை கடத்துபவர்களும் கொடுமைப்படுத்த படுகின்றனர்.




இந்த பெண் தப்பிக்க தீவிரமாக முயற்சிக்கிறாள்.

பொய்யர்களுக்கு தண்டனை.



பணத்தை திருடுபவர்களுக்கு முட்களாலும் ஊசிகளாலும் குத்தப்படுகின்றது.







பணத்தை திருடுபவர்கள்

இறந்துபோன ஒரு பெண்ணையும் அவளது மகனையும் நான் நரகத்திலே பார்த்தேன். நரகத்திலே அவர்கள் ஒருவர் மீது ஒருவர் அன்பு செலுத்துவது கிடையாது காரணம் அவர்களின் வேதனை தாங்க முடியாத வண்ணம் இருக்கின்றது. அந்த கொடுமையில்லிருந்து வெளியே வர அவர்கள் எதையும் செய்கின்றனர். ஒருவர் மேல் ஒருவர் ஏறியும் பார்கின்றனர்.




நரகத்தில் பூச்சிகள்.

இந்த பூச்சிகள் சிந்தனையில் பாவங்கள் செய்பவர்களுக்காக. அவர்கள் தங்களுடைய சொந்த நினைவுகளாலும் தங்கள் சொந்த ஞானத்தினாலும் நிறைந்திருந்தவர்கள். அவர்கள் மீது எண்ணிக்கையற்ற புழுக்கள் காணப்பட்டது, அவர்களின் உடல் பெரிய பூச்சிக்களால் காயப்படுத்தப்பட்டு அந்த காயங்களுக்கூடாக அப்படிப்பட்ட பூச்சிகள் வாய்,காதுகள், தலை மற்றும் உடம்பு முழுவதும் உள்ளேயும் வெளியேயும் போய் வருகின்றன.



நற்செய்திக்கு எதிர்த்தல்:

இந்த படம் பிசாசுகள் எப்படி மனிதர்களை வசப்படுத்தி நற்செய்திக்கு தடைசெய்கின்றது என்பதையும் நற்செய்தியாளர்களை எப்படி துன்பப்படுத்தி கொலை செய்கின்றது என்பதையும் காட்டுகின்றது.






இந்த மக்கள் அவர்களின் சொந்த எண்ணங்கள் மற்றும் சொந்த அறிவினால் நிரம்பி இருந்தனர்.






இந்த மக்கள் தங்கள் சிந்தனையில் பிடிவாதமாக இருந்தவர்கள். அவர்கள் நினைத்தது " இயேசு கிறிஸ்து ஏன் என் வாழ்க்கையில் கிரியை செய்ய வேண்டும்? நான் யார்? அவர் என்னை நேசிக்கின்றார் என நான் விசுவாசிக்கவில்லை. நான் மிகவும் கொடியவன். என்னை போன்ற யாரையும் அவர் நேசிப்பார் என்று நான் நினைக்கவில்லை என்பதே."

கர்த்தருடைய வார்த்தைகளை எதிர்த்தவர்களும் அவருடைய கட்டளைகளை தள்ளி விட்டவர்களும் அங்கே இருந்தனர். அவர்கள் இருந்த இடமானது வறுக்க பயன்படும் தாச்சியை போல் நகர நேருப்பிலே எரிந்து கொண்டிருந்தது.




இந்த மனிதர்கள் கர்த்தருடைய சித்தத்தின் படி செய்ய மனதில்லாதிருந்தவர்கள் அவர்களுடைய முடிவு நரகத்தில். நாங்களோ எங்களுடைய எண்ணங்களையும் சிந்தனைகளையும் கர்த்தர் மீதே வைக்க வேண்டும். இந்த கொடுமையானது கிறிஸ்தவர்களாய் இருந்தும் நற்செய்தியை மற்றவர்களுக்கு சொல்லாதவர்களுக்கானது. இவர்கள் சுவிசேசத்தை மற்றவர்களுக்கு அறிவிக்கதவர்களும் தங்களுடைய அழைப்பை புறக்கணித்தவர்களுமாவார்கள்



இந்த கொடுமையானது கர்த்தருடைய வார்த்தையை புறக்கணித்து தங்களுடைய பாவத்தில் தொடர்ந்தும் இருக்கும் மனிதர்களுக்கானது. இவர்கள் கர்த்தருடைய பார்வைக்கு பொல்லாப்பானதை செய்பவர்கள்.




விக்கிரகாராதனைகாரர்களும், தங்களுடைய தீய வழிகளில் பிடிவாதமாக இருந்தவர்களும்.



முறுமுறுப்பவர்களும் குறை கூறுபவர்களும் நரகத்திலே காயப்படுத்தப்படுகிறார்கள் *(I கொரிந்தியர் 10:10)*







முறுமுறுபும் குறைகளும் அவர்களது இருதயத்தில் இருக்கின்றன.

மனைவிக்கு துரோகம் செய்பவர்கள், ஆண் புணர்ச்சிகாரர்கள், முறை தவறிய புணர்ச்சிகாரர்கள் என்பவர்களுக்கு நரகத்திலே ஒரு இடம் உண்டு அங்கே அவர்களுக்கு கத்தி மற்றும் கூறிய ஆயுதங்களால் குத்தி கொடுமைபடுத்துதல் நடைபெறுகின்றது.




பாலியல் ஒழுக்க கேடுகளை செய்பவர்களுக்கு அவர்களுடைய மர்ம உறுப்புகள் பிசாசுகளால் சிதைக்க படுகின்றது.



நரகமும் அதன் தாங்க முடியாத கொடுமைகளும் முடிவற்றது.




அது மனந்திரும்பாதவர்களுக்கு .



நரகத்தை சுற்றிலும் அக்கினிமயமாக காணப்படுகின்றது தப்பித்துக்கொள்ள ஒரு இடமும் இல்லை.




உனக்குள் இருக்கும் எந்த பிசாசின் சிந்தனைகளையும் நீ கொலை செய்ய வேண்டியது அவசியம்



நங்கள் மனந்திரும்பி பிரார்த்தனை பண்ணும்போது, தேவதூதர்களின் படை கீழே இறங்கி வந்து பிச்சாசுக்களை தங்களுடைய பட்டயத்தால் நிர்மூலமாக்குகிறது .



இயேசு கிறிஸ்து சொன்னார் " என் மீது கவனம் செலுத்து நீ என் மீது மாத்திரமே கவனம் செலுத்த வேண்டும்."



மனிதர்கள் மனந்திரும்பும்போது அவர்கள் மரணத்திலிருந்து ஜீவனுக்கு கடந்து வருகிறார்கள். மறுபக்கத்திலே அவர்களுக்காக இயேசு கிறிஸ்து காத்து கொண்டிருக்கிறார்.




அவர்கள் தங்களுடைய பாவ பாரத்தை இறக்கி வைத்து விட்டு இடுக்கமான பாதை கூடாக ஜீவனுக்கு போகும் வழியில் போகிறார்கள். நரகத்துக்கான பாதையை அவர்கள் கைவிடுகின்றனர்.



நாம் மனந்திரும்பும் பொது இயேசு கிறிஸ்து நம் பாவங்களை மன்னிக்கிறார்.







உங்கள் பாவங்களை விட்டு மனந்திரும்பி இயேசுகிறிஸ்துவில் நம்பிக்கை வையுங்கள்! அப்படி நீங்கள் செய்வீர்கள் என்றால் நரகத்திற்கு பதிலாக சொர்க்கலோக இராட்சியம் உங்களுக்காக காத்து கொண்டிருக்கிறது. அதுவே நீங்கள் நித்திய நித்தியமாக சந்தோஷத்தை அனுபவிக்கும் இடமாக இருக்கிறது.!

# நரகத்திற்கு செல்ல வேண்டாம்!

